# <u>In the Court of the  District Munsif, Eraniel</u>

**Original Suit No. 23/2025** **Date:20.02.2026.**

**(PW1)- அருணைநாதன்**

<u>**1** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு  விசாரணை</u>

1. இந்தவழக்கின் 3 வது பிரதிவாதி எனது அம்மா என்றால் சரிதான். 4,5 பிரதிவாதிகள் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். 2 வது  பிரதிவாதி யார் என்றால் எனது சித்தப்பா ஆவார். இந்த வழக்கு  பட்டிகை 1 ஆம் இன சொத்து எனது குடும்ப கோவிலான இசக்கிஅம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று இந்த வழக்கில் கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கோவில் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றாலும் நான் தனிப்பட்ட முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான். நீல நாடாரின் வாரிசுகள் தற்பபோது எத்தனை குடும்பங்களாக உள்ளார்கள் என்றால் 4 குடும்பங்களாக உள்ளனர்.

2. மேற்படி நீல நாடாரின் வாரிசுகள் யாரும் இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த அதிகாரமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, வாய் மொழி அதிகாரம் கொடுத்துள்ளார்கள். மேற்கூறியவாறு வாய் மொழி அதிகாரம் பற்றி எனது வழக்கில் குறிப்பிடவில்லை என்றாலும் அவ்வாறு வாய்மொழி அதிகாரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றாலும் சரியல்ல. வாய் மொழி அதிகாரம் வழங்கியதாக நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீலநாடார் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்ய எனக்கு அதிகாரம் இல்லை என்றாலும் அதன் அடிப்படையில் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

3. இந்த வழக்கு பட்டிகை 1 ம் இன சொத்து இசக்கிஅம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று காட்டக்கூடிய வருவாய்  ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறான வருவாய் ஆவணங்கள் ஏதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை 1 ம் இன சொத்தின் பழைய புல எண் 2681 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி பழைய புல எண் 2681 ல் மொத்தம் 60 செண்ட் என்று உள்ளதாகவும் அதில் 3.75 செண்ட் கோவிலுக்கு கொடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும்

வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி பழைய புல எண் 2681, ஐந்து சர்வே எண்களாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. மேற்படி ஐந்து உட்பிரிவுகளும் புதிய புல எண்களாக மாற்றம் செய்யும் போது ஒன்பது புதிய புல எண்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தில் மேற்படி உட்பிரிவுகளில் வா.சா.ஆ.2 ஆவணப்படி கோவிலுக்கு பாத்தியப்பட்ட 3.75 செண்ட் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 159/24 ஆகும். நான் கூறியவாறு மேற்படி வா.சா.ஆ.2 ஆவணப்படி கோவிலுக்கு பாத்தியப்பட்ட 3.75 செண்ட் வா.சா.ஆ.5 ஆவணத்தில் துலங்காது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் பிரதிவாதியின் பெயரில் உள்ள ஆவணம் என்றாலும் அதில் மொத்த விஸ்தீரணம் 2.5 செண்ட் கொண்ட சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சொத்தின் எல்கையும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கோவில் சொத்தின் எல்கையும் மாறுபட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்கு எல்கையாக காலன்நாடார் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்கு பக்க எல்கையாக காலன்நாடார் சொத்து என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் அவரது சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண் சொத்து காலன்நாடாரின் சொத்து என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யலாம என்றால் தாக்கல் செய்யலாம். வழக்கு பட்டிகை சொத்து இசக்கிஅம்மன் கோவிலின் பேரில் உள்ள வருவாய் ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை.

6. வா.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்கு பட்டிகை 1ம் இன சொத்து நீலசாமி நாடாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது தவறாகும். மேற்படி பட்டிகை 1ம் இன சொத்திற்க்கு வருவாய் ஆவணகள் நீலசாமி நாடார் பெயரில் இருந்து வா.சா.ஆ.3 ஆவணப்படி 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த பின்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் படி 1ம் பிரதிவாதி, ராஜமணி என்பவருக்கு 2020 வருடம் செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை 1ம் இன சொத்து ராஜ மனி வீட்டிற்கு அடுத்துள்ள சொத்து என்றால் சரிதான், தெற்கு பக்கம் உள்ளது. வழக்கு பட்டிகை 1ம் இன சொத்தின் கிழக்கு ஒரேத்தில் தென் வடலாக ஒரு பாதை செல்கிறது என்றால் சரியல்ல, மேற்படி பாதை வழக்கு பட்டிகை 1ம் இன சொத்தின் மேற்கு பக்கம் உள்ளது. மேற்படி பாதை வழியாக ராஜ மணி மற்றும் மற்ற

நபர்களின் வீடுகளுக்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு செல்கிறது என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணைக்காக 27.02.2026 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**